UNITED NATIONS
SRI LANKA

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினம் - 2023 தொடர்பில் இலங்கைக்கான ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளரின் அறிக்கை

உலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கின்ற இவ்வேளையில், இந்த கொடூரமான குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன ஆனது என்று தெரியாமல் வேதனையால் வாடுகின்றவர்கள் பற்றி நினைத்துப் பார்க்கிறோம். நாடளாவிய ரீதியில் பல குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் பல வருடங்களாக நிச்சயமற்ற தன்மையை சகித்துக்கொண்டு, பதிலளிக்கப்படாத கேள்விகளோடு வேதனையுடன் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ள சூழ்நிலையில், இலங்கையில் இந்த நாள் மிக ஆழமாக எதிரொலித்த வண்ணமே உள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தேசத்தின் வரலாற்றில் ஒரு வலி நிறைந்த வடுவை விட்டுச்சென்றுள்ளதுடன், தங்களின் அன்புக்குரியவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது திட்டவட்டமாகவே இல்லையா என்ற தெளிவற்ற நிலையில் இருக்கும் ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் வாழ்க்கையைத் தொடர்ந்து வடிவமைப்பதாகவும் உள்ளது. கடந்த தசாப்தங்களில் மிக சிறியளவிலான முன்னேற்றமே கண்டுள்ள போதிலும், தங்கள் அன்பிற்குரியவரின் இருப்பிடத்தையும், அவருக்கு நேர்ந்த கதியை அறியவும் இலங்கையில் உள்ள குடும்பங்கள் முன்னரை விடவும் போராடுகின்றனர். இதற்கான பதிலைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களின் இடைவிடாத முயற்சியானது அவர்களை மேலும் பழிவாங்கலுக்கும் அச்சுறுத்தல், களங்கம் மற்றும் ஓரங்கட்டப்படுதலுக்கும் ஆளாக்கிவருகிறது .

அண்மைக் காலங்களில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர்கதையாக இருந்துவரும் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2015 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட வலுக்கட்டாயமாக காணாமற் போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயம் (ICPPED), காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) நிறுவப்பட்டமை என்பன இவற்றுள் முக்கிய மைல்கற்களாகும். காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் திரட்டப்பட்டு வெளியிடப்பட்ட " காணாமல் போனதும், காணாமல் ஆக்கப்பட்டதுமான ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் பட்டியல்" நீதி வழங்குவதில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான ஒரு அடித்தளமாக இருந்துள்ளது.

எனினும் பாதிக்கப்பட்டவரின் உண்மையைக் கண்டறிவதற்கான உரிமையையும், நீதிக்கான மற்றும் இழப்பீட்டிற்கான உரிமையையும் உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை இன்னும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாதிக்கப்பட்டவருக்கு நேர்ந்த கதியை அறியவும் அவர்

இருப்பிடங்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடுகளை வழங்கவும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்யவும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு அதிகாரத்தரப்புகளை நாம் கேட்டுக்கொள்கிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கும், பிழைத்தவர்களுக்கும், குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் உண்மையை வெளிக்கொணர்ந்து உறுதிசெய்வதானது மிக முக்கியமாகின்றது. உண்மையின் மூலமே ஆற்றுப்படுத்தும் பணிகளைத் தொடங்க முடியும் என்ற வகையில், உண்மையைக் கண்டறிவதற்கான நாட்டம் தொடர வேண்டும், அதன் பின்னரே நல்லிணக்கத்திற்கான செயல்முறை ஆரம்பமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையானது வலிந்து காணாமலாக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்டவர்களினதும் அவர்கள் குடும்பங்களுடனும் தொடர்ந்து கூடவே நிற்பதோடு, வலிந்து காணாமலாக்கப்பட்டவரது உறவினர்களுக்கு உண்மையைக் கண்டறிவதற்காகவும், நீதிக்காகவும், இழப்பீட்டிற்காகவும் தனது ஆதரவினை மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கடந்த காலத்தின் நினைவுச்சின்னங்களாக மாறுவதை உறுதிசெய்வதற்கான எமது அர்ப்பணிப்பைப் புதுப்பிப்போம். பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்போம், நீதியின் கொள்கைகளை நிலைநாட்டுவோம், எந்தவொரு குடும்பமும் நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்படாத ஒரு எதிர்காலத்தை உருவாக்குவோம். இந்த நீண்டகால பிரச்சினைக்கு தீர்வினை காண்பதானது நீதியை நிலைநிறுத்தும் செயற்பாடு மட்டுமல்ல, இலங்கை நாடானது முன்னேற்றப் பாதையில் பயணிக்கவும், நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்குமான முக்கிய அடித்தளமாகவும் அது அமையும்.

நன்றி.

*The United Nations in partnership with the government and people of Sri Lanka is pursuing a Sustainable Development Agenda that leaves no one behind. Collectively and through its specialised agencies, funds, programmes and offices, the UN strives to support the Government of Sri Lanka to achieve sustainable and inclusive economic growth, with equitable access to quality social services, strengthened human capabilities, human rights and social cohesion.*

*Learn more at https://srilanka.un.org/*

**Media Contacts:**
rcs-unsrilanka@un.org

**Get in touch**: UN Sri Lanka on Twitter | Facebook | Instagram